

முற்றுப்புள்ளி இட
இயலா ஒரு முக்கிய
உறவிற்கு..!

May 2009 3-1 மே 2009
VASANTHAM Tamil Monthly

# வசந்தம்

வாசிக்க மட்டுமல்ல... வாழ்க்கைக்கும்..!

மாத இதழ்

ஆண்டு சிறப்பிதழ்
கல்வி மலர்

வாழ்வியலில் கல்வி

# வலிமைத் துணை ஒளிர்மை அணை!




இலவச வெளியீடு



மழலைக் கல்வி
மகோன்னதம்
பெற..!

IPC
ISLAM PRESENTATION COMMITTEE

இந்த வசந்தப் பயணம்
மூன்றாண்டின் முதுகில்

# முத்தொளி தெறிக்க செல்லும் ஓர் யதார்த்தப் பயணம்..!

இது வரை.......


அறிவுப் பேரலைகளில் முட்டி,மோதி
மூன்றாண்டின் ஆரம்பக் கரையைத்
தொட்டிருக்கின்றது வசந்தப்படகு!

அறிவுமலர்களிலிருந்து ஞானத்தேனை
வரையறைகள் எதுவுமின்றி அள்ளியெடுக்கும்
அதன் அறிவார்ந்த ஆளுமைப் பயணம்,
இனியும்..
அழகிய ஆக்கங்களால், விசித்திர வினயங்களுடன்..,
உங்களின் அறிவு மேகங்களை கருக்கொள்ளச் செய்யும்!

துடித்தெழும் உங்களின் உணர்வுத்தாகங்களுக்கு
வசந்தோலைகளை வடித்து வார்த்துத் தரும்
படைப்புக்கள் உங்கள் இருமை வாழ்வுப்பயணத்தையும்
ஐயம் கொள்ளச் செய்யும்!



# இந்த இதழில்..!



## முகப்புக் கட்டுரை


6 வலிமைத் துணை, ஒளிர்மை அணை!
மு.அ.அப்துல் முஸவ்விர்





14 தொடர்
பெரும்பான்மை மதங்களில்...
Dr. ஜாகிர் நாயக்

16 கதம்பம்
ஆளுமை - பேட்டி - பிற..
ம.்.பாஸா

17 தொடர்
இறைநம்பிக்கையாளர்களின் ...
்.பர்ஸானா ர.்.பீக்

18 மழலையர் சோலை
தமிழ் கற்போம்!
சௌந்தர்யம்

19 சுற்றத்து செய்திகள்
பேப்பர் பையன்

20 சிறப்பு அறிவுபோட்டி
பின்த் அன்ஸார்

கவித்தூறல்கள்
15 முற்றுப்புள்ளி இடஇயலா ஒரு முக்கிய உறவிற்கு..!
உம்மு அப்துல்லாஹ்

2 வாசகர் ஓலைகள்
கடிதங்கள்,தொலைநகல்கள், மின்னஞ்சல்கள்

3 தலையங்கம்
இருமை வாழ்விற்கும்..
ஆசிரியரிடமிருந்து..!

10 IPC வழித்தடங்கள்
ஈராண்டு நினைவுகள்
அப்துல்லாஹ்

12 தொடர்
பெரும்பாவங்கள்
N.M.M. ஹுஸைன்

13 சிறப்புக் கட்டுரை
கல்வியின் பசுமை...
முஹம்மத் ஜாபிர்




## துணை முகப்புக் கட்டுரை


4 மழலையர் கல்வி மகோன்னதம் பெற..!
ஸினூ.்.பா அன்ஸார்



بريد الربيع – كلمة العدد– تعليم الأطفال في الإسلام – مكانة العلم في الإسلام – أنشطة اللجنة –
خطورة الشرك – العلم في الآحاديث النبوية – تصور الإله في الديانة البوذية – ساحة الأدب والشعر –
أخبار عن العلم – أم المؤمنين سيده عائشة رضى اللّه عنها– صفحة الأطفال– أخبار العالم –
المسابقة الثقافية



வசந்தம்

VASANTHAM - Ar-Rabae
Tamil Monthly
MAY 2009
மே 2009
மலர் 3 இதழ் 1



CHIEF PATRON
தலைமைப் புரவலர்
AshShaikh
Mohd. Ismail Al-Ansari

GENERAL SUPERVISOR
பொது மேற்பார்வையாளர்
AshShaikh
Khalid-al-Sabae

EDITOR
ஆசிரியர்
M.A. Abdul Musavir

SUB-EDITOR
துணை ஆசிரியர்
Zinoofa Ansar

EDITORIAL BOARD
N.M.M. Hussain
Ameer Hasan Nainar
Faizal Muhammad
Muhammad Jabir
Farzana Rafeeq

DESIGN
வண்ண உருவரைபடம்
247 44 00 Ext: 512
Nader Bellal



PUBLISHER
வெளியீடு
IPC
KUWAIT

CONTACTS
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
DIAL
22447526, 22444117 Extn: 208
FAX
22400057
Attn: IPC—VASANTHAM
e-mail
amusawir@alnajat.com.kw
WEBSITE
www.ipc-kw.com

# வாசகர் ஓலைகள்

## கொட்டியும் ஆம்பனுமாக.., வசந்தத்துடன் பிணைந்தேன்!

**அப்தல் கரீம் மகறூப்**
சின்னக் கிண்ணியா
இலங்கை
மிஷ்ரி.ப்
குவைத்




வசந்தம் மாத இதழ் வாசிக்கும்போது ஆயிரம் பூக்கள் என் மீது சொரிகின்ற ஓர் உணர்வு, ஒரு ஸ்பரிசம்! அற்றைக்குளத்திலே அருநீர்ப் பறவை போல் ஆயிரம் சஞ்சிகைகளையும், இதழ்களையும் கண்டேன், ஆங்கே கொட்டியும், ஆம்பனுமாக வசந்தமே உன்னை நான் காண்கின்றேன்.

மார்ச் மாத வசந்த இதழ் சுமந்து வந்த அத்தனை ஆக்கங்களும் ஒன்றையொன்று நிறையில் குறையாதவையே! சுத்தான தமிழ்நடையை கொத்தாக அள்ளி வீசிய 'பெண்:அவள் சமூகத்தின் கண்!' எனும் முத்தான கவித்தூறல்கள் எனைப் பித்தாக்கச் செய்தன.மேலும், 'இருமை உலகின் இனிய நாயகன்' தலைப்பில் ஆசிரியரிடமிருந்து வந்த தொகுப்பு, 'அண்ணலாரின் பிறப்பு அகிலத்துக்கே சிறப்பு' எனும் சிறப்புக் கட்டுரை ஆகியன யாவும் சிறப்பாக அமைந்துள்ளன.

இறை நாடினால்.., வருங்காலத்திலும் வசந்த மலர் இதே பொலிவுடன் பூத்து வாசகர்கள் மத்தியில் நறுமணம் வீச வேண்டுமென்று ஏகஇறையிடம் இறைஞ்சுகின்றேன்!

---

**முஹம்மத் ர.'.பீக்**
கள்ளக்குறிச்சி
தமிழகம்
ஸுப்ஹான்
குவைத்

'வசந்தம் ஏப்ரல், 2009 இதழ் அருமை! வாழ்வின் முக்கியத்துவத்தை அது நன்கு விளக்கியது. மார்ச், 2009 இதழ் முகப்புக் கட்டுரை 'இது அழகல்ல..!', நவீன நாகரிகப் பண்பாட்டின் பெயரால் பெண் சமூகத்தை இழிவுபடுத்தும் நடத்தையை தோலுரித்துக் காட்டியது.உலகம் தம்மை ஆயிரம் விதத்தில் நோக்கினாலும் பெண் இனம், தனது ஆளுமையின் சரியான பயன்பாட்டை ஆக்கபூர்வ வகையில் பயன்படுத்தாத வரை இதுபோன்ற அவலங்கள் அதிகரிக்கவே செய்யும்.

---

**அஸ்மா**
தஞ்சாவூர்
தமிழகம்
சால்மியா
குவைத்

நவீனத்தின் பெயரால் அநாகரிக சட்டங்களைக் கொண்டு பெண்ணினத்தை இழிவுபடுத்திக் கொள்ளும் சமூகத்துக்கு மார்ச் '2009 இதழின், துணை முகப்புக் கட்டுரை ஏகஇறைச் சட்டம், பெண்ணுரிமை காக்கும் கட்டம் சரியான சாட்டையடி! அண்ணலார் (ஸல்) அவர்களின் அழகிய ஆளுமையை சரியான கோணத்தில் எடுத்துரைத்திருக்கின்றார் ஆசிரியர். இணைவைப்பின் கொடுங்கோன்மையை மனிதஇனம் உணர்ந்து திருந்தவில்லையெனில் அது படைத்த இறைவனுக்கு செய்யும் பெரும் துரோகம் ஆகும்.

---

**I.விக்டோரியா ஈமான்**
இலங்கை
யர்முக் குவைத்

வசந்தம் மார்ச், 2009 இதழ் கண்டேன்.வசந்தத்தின் வண்ணங்கள் எங்கள் ஒவ்வொருவரது வாழ்க்கையின் சின்னங்கள். பெண்ணைப் பற்றிய கவித்தூறல் அருமை! 'இது அழகல்ல' - முகப்புக் கட்டுரை எது உண்மை அழகு என்பதை எமக்குத் தெளிவாக விளக்கியது. உலகத்தார் அனைவரும் இதனை உணர வேண்டும் என்பதே எனது அவா! தொடர்ந்தும் எம் வசந்தம் நல்ல கருத்துக்களை அள்ளித் தர வேண்டும் என வல்ல ஏகஇறைவனிடம் இறைஞ்சுகின்றேன்!

---

**சுவர்னா**
இலங்கை
ராபியா
குவைத்

அன்புக்கினிய வசந்தமே!
இம்மாத 'மகளிர் தின சிறப்பிதழ்'-இல் நீ உரைத்த 'பெண்:அவள் சமூகத்தின் கண்' எனும் கவித்தூறல், இது அழகல்ல எனும் முகப்புக் கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது.சமூகத்தில் பெண்ணினம் பெறும் இடையூறுகளுக்கு உன் ஆக்கங்கள்.. ஆக்கபூர்வ தடைகள் தர முடியும். நீ தரும் அத்தனை அம்சங்களும் கொண்டு எம் அறிவுக் கண்கள் குளிர வேண்டும் என அல்லாஹ்வை இறைஞ்சுகின்றேன்.

---

**பிரேம்**
இராமநாதபுரம்
தமிழகம்
ஸுப்ஹான்
குவைத்

பெண்ணின் பன்முக ஆளுமைகளை அழகாக வெளிப்படுத்திய கவித்தூறல் வாசித்து முடித்தவுடன் தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்ட உணர்வு!இச்சைப் பொருளாக மட்டுமே இந்த இறைபடைப்பைக் காணும் சுயநல உலகம், இக்கவித்தூறல் கண்டு தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

## ஆசிரியரிடமிருந்து..!



# இருமை வாழ்விற்கும் கல்விக் கரங்களே உதவிக்கரங்கள்.....

கல்வி! கரைகள் காணா ஓர் அற்புத சமுத்திரம். மதுரத்துளிகள் கல்வியின் சுவைகள்.!சென்றடையும் வழிகள் திசைகள் இல்லை ஒருபோதும்! திக்கற்ற போதும் திணரும் போதும் கல்வியின் கரங்களே எமக்கு உதவும் வலிமைக் கரங்கள்.....

செருப்பு தைக்கும் தொழிலாளி கூட, தன் மகன் தன்னைப் போன்று வாழ்வில் கடினப்பணியைச் செய்யக்கூடாது என்று நினைத்து, அவர்களை நுனிநாக்கு ஆங்கிலம் புரளும் கான்வென்டில் படிக்க வைக்கின்றான்.அதற்காக, இரவு-பகல் பாராது உழைக்கின்றான்.

இத்தகைய எதிர்பார்ப்பு மிக்க கல்வியின் தரம் சர்வதேச தரத்துடன் ஒப்பிடும்போது,இந்தியா-இலங்கை உள்ளிட்ட வளரும் நாடுகளில் மேம்பட்டிருக்கின்றதா?

இந்த மூன்றாம் உலக நாடுகளில், மாணவர்கள் கல்வியைப் புரிந்துகொண்டு முன்னெடுத்துச் செல்வதைக் காட்டிலும், மனப்பாடத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரிகின்றது.இதனால், அவர்கள் கற்றலில் காட்டும் சிறப்பான ஆர்வம், எழுத்துத் திறமை,வெளிப்படுத்தும் திறமை ஆகிய நிதரசனத்தோடு தொடர்பு இல்லாமல், மூடிய இறுக்க அறைக்குள் முடங்கிவிட்டதுபோல் தெரிகின்றது.அதனால்தான்,மனப்பாடம் செய்த வினாக்களுக்குரிய பதில்களை சிறப்பாக செய்யும் மாணவர்கள், சிந்தனையைப் பயன்படுத்தி அலசி ஆராய வேண்டிய வினாக்களுக்கு 'சொதப்பல்' பதில்களையே தர வேண்டிய நிலை!

வகுப்புக்கள் கூடக்கூட மாணவர்களின் கல்வித்தரம் மேம்படவல்லவா செய்ய வேண்டும்? ஆனால், இடைநிலைக் கலிவியில் அறிந்துகொள்ள வேண்டியவற்றை ஒரு மாணவனோ,மாணவியோ, உயர்நிலைக் கல்வியில்அறிந்துகொள்ள வேண்டிய நிலையில்தான் இருக்கின்றார்.

நிஜவாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட கல்வியறிவுக்குத் தர வேண்டிய முக்கியத்துவத்தை,தாத்பார்யமேம்பாட்டுஅம்சத்தைபாடப்புத்தகத்தில் 'இத்தனையாவது பக்கத்தில்.. இத்தனையாவது வரியில்.., இதற்கான பதில் இருக்கின்றது' எனும் மனப்பாட போக்குக்கு அதீத முக்கியத்துவம் தரக்கூடிய வகையில் நமது கல்வி முறை இருப்பது துரதிருஷ்டம்.

கல்விப்பாடங்கள் தகவல்களிலிருந்து ஆற்றல்களை நோக்கி நடைபோடும் ஆக்கபூர்வ வகையில் அமைய வேண்டுமே தவிர, புத்தகப் பக்கங்களிலிருந்து தேர்வு அறை வரை செல்வது போன்ற பயனற்ற முறையில் அமையக்கூடாது.

அடுத்து முக்கிய அம்சம்! கல்வி கற்பிக்கும் ஆசான் பள்ளியில் கரும்பலகை மற்றும் புத்தகங்கள் இவற்றோடு இயைந்த தொடர்பகத்தில் மாணவர்களுடன் பழகுவது மாறணேண்டும். மனப்பாடத்திற்கு செவி கொடுக்கும் வழக்கத்திலிருந்து, புரிந்து படிப்பதைக் கேட்கும் பழக்கத்துக்கு ஆசிரியர்கள் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

கல்வி தொடர்பான எதுவொன்றையும் கேட்ட பின்னர் மறப்பது சரியல்ல!

கல்வி குறித்த அம்சங்கள் எதுவொன்றையும் பார்ப்பதை நினைவில் கொள்ளாதிருப்பது அதைவிட சரியல்ல..!

கேட்டு, அறிந்து பின்னர் செய்து பார்ப்பதை, புரிந்துகொள்ளாதிருப்பது எதனைவிடவும் சரியல்ல..!

இதனை மாணாக்கர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அனைத்துக்கும் மேலாக, கல்வி கற்பதை உலகியல் பொருளாதார வாழ்வுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாகவே, இந்த சமூகம் காண்கின்றது. ஆதலால்,பணம் கொடுத்து கல்வியை வாங்கி பின்னர்.. அந்த கல்வியைக் கொடுத்து பணம் வாங்குவதே இன்று அனைத்துத் துறைகளிலும் இருக்கும் அவலநிலை.

ஆனால், உலகை உய்விக்க வந்த இஸ்லாமிய நெறியோ, கல்வியை உலகம் - மார்க்கம் என்று இருகூறாக்காமல், மனித சமூகத்தின் இம்மை-மறுமை வாழ்வுக்கு உதவும் வகையிலான சூழலை முன்வைக்கின்றது. அதனால்தான், இஸ்லாத்தின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் திண்ணைத் தோழர்கள் அன்னாரிடமிருந்து பெற்ற கல்விஞானம் அவர்தம், இம்மை வாழ்வை இலட்சியத்துடன் இலங்கச் செய்தது. மறுமை வாழ்வுக்கான மாட்சிமையை மட்டற்று வழங்கியது!

இத்தகைய உன்னத கல்வி முறையையே இன்றைய உலகம் எதிர்நோக்கி நிற்கின்றது. அதனை அடைய இஸ்லாமிய நெறியை சரியாக விளங்கிப் பெறுவதைத் தவிர இந்தப் பேரண்டத்துக்கு வேறு வழி இல்லை!

ஆசிரியர்
amusawir@alnajat.com.kw

# மழலையர் கல்வி மகோன்னதம் பெற!



எழுத்து
ஸினூஃபா அன்ஸார்

கல்வி! 'சாதாரண' மனிதனை 'சிறந்த' மனிதனாக ஆக்குகின்றது. 'கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பது முதுமொழி. அதுவும் உலகக் கல்வியோடு, வாழக்கை நடைமுறையை புடம் போட்ட தங்கம் போல் இலங்கச் செய்யம் மார்க்கக் கல்வியையும் கொண்ட அறிவைப் பெற்றவர்கள் சான்றோர் பட்டியலில் சரியாது தடம் பதிப்பார்கள்.



சான்றோரான மனிதர்களை சமூகம் பெற வேண்டுமெனில், அவர்தம் வாழ்வின் மழலைப் பருவத்திலிருந்தே அதறகான முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

உறவினர் வீட்டுக்கு செல்லும்போது அங்கு தன் குழந்தை செய்யும் அட்டகாசங்களைக் காணும் பெற்றோர், அதனைத் தடுக்க முதலில் குழந்தையை அதட்டுவார்கள்.ஆனால், குழந்தை தொடர்ந்து அதனை செய்து கொண்டிருந்தால், ஒரு கட்டத்தில் அப்படியே விட்டுவிட்டு தங்கள் பேச்சில் மும்முரமாகி விடுவார்கள்.

இது அன்றாடம் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கும் நிகழ்ச்சி! இத்தகைய சாதாரண நிகழ்வுகளிலிருந்து ஆரம்பிக்கும் குழந்தையின் ஆளுமைச் செயல்பாடு படிப்படியாக அவர்களது வளர்ப்பு, சூழல் மாறுபாடு, சமூக சமன்பாடுகள் என்று வெவ்வேறு விதங்களில் தடம் பதிக்கின்றது. அவர்களின் இந்த சிறு நிகழ்வுகளும் அவர்கள் பெறும் கல்வி மற்றும் அறிவு தொடர்புடையதே!

குழந்தையிடம் அதிகம் எதிர்பார்ப்பது முடியாது என்று கூறுவார்கள். அதேபோல், அவர்களின் அனைத்து எதிர்பார்ப்புகளையும் அவர்தம் கோணத்திலேயே பூர்த்தி செய்ய முடியாது என்பதும் உண்மை! ஆனால், நல்ல அறிவும், பயன் தரும் கல்வியும் முன்மாதிரியான நல்லொழுக்கமுமே அவர்களை சான்றோராக உயர்த்தும்.

மாறிவரும் உலகத் தேவைகளுக்கு ஏற்றவாறு குழந்தையின் வருங்காலம் சிறப்படைய வேண்டுமெனில், அவர்களிடையே பயன் தரும் கல்வியே அவசியம்.

பெற்றோரைப் பொறுத்த வரை அவர்தம் நோக்கங்கள் வேறுபட்டதாக இருக்கக்கூடும் குணநலன்கள் மாறுபட்டிருக்கும். எம் மழலைகள் "நாம் நினைத்தபடிதான் கல்வி கற்க வேண்டும், நாம் நினைத்தபடிதான் வாழ வேண்டும்" என்று நினைக்கலாம். ஆனால் குழந்தைகளின் எண்ணம் வேறு மாதிரியாக இருக்கக்கூடும். ஆனால்,அவர்களுடைய நினைப்பை எமது எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஆக்கபூர்வமாக மாற்றினால், உண்மையில் இருவருமே வெற்றியாளர்கள்! ஆம், எம் எதிர்பார்ப்பு மழலைகளின் இருமை உலக வெற்றிக்குக் கட்டியம் கூறும் வகையில் அமைய வேண்டும். அதற்காக திட்டமிட்ட ஒரு பொதுவழிமுறையில் அவர்களை வாழ்க்கைசாலையில் பயணிக்கச் செய்யும்போது... இடையில் அவர்கள் சந்திக்கும் பல்வேறுவிதமான தடைகளையும் தமக்கு சாதகமாக்கி வெற்றி இலக்கை எட்டுவார்கள்.

அதற்காக என்ன செய்ய வேண்டும்?

## இளமையில் கல்!

'மழலைக்கு இந்த வயதில் என்ன தெரியும்...?' உங்கள் அங்கலாய்ப்பு புரிகின்றது. ஆனால், ஆற்றல் வெளிப்பாட்டுக்கு ஏற்ற ஒரு பருவம் மழலைப் பருவமே!

எதுவொன்றையும் உடனுக்குடன் கிரகித்துக் கொள்ளும் - Grasping Power ஆற்றலைப் பயன்படுத்தி நல்ல முறையில் வழிநடத்தினால் பயன்கள் அளவிடற்கரியனவாக அமையும்.அதற்கான பயணத்தை எப்படி நடத்துவது என்பது பெற்றோர் கைகளில் உள்ளது.

அதற்கு நல்லொழுக்கத்துடன் சேர்ந்து உதவுவது கல்வி! ஆக்கபூர்வ, உன்னத பண்பாட்டு பழக்கவழக்கங்கள் தரக்கூடிய மார்க்கக் கல்வியை அடிப்படையாக வைத்து, தேவையான நல்இலட்சியங்களை பூர்த்தி செய்யக்கூடிய வகையிலான உலகக் கல்வியை அவர்களுக்கு ஏற்படுத்தித் தருவது உங்கள் பொறுப்பு.

அதன் பயன் வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கு தொடராக அமைந்து நல்ல கனிகளைத் தரும்.



## குழந்தையின் பிடிவாதம்..., உங்களுக்கு வேண்டும் மிதவாதம்..!

நீங்கள் நினைத்தவாறே கல்விமுறை அமைய வேண்டும் என்பதில் மாற்றம் காட்டுங்கள்.ஒரு துறையில் சிறப்பாக இருக்கும் உங்கள் குழந்தையின் திறமையை மட்டுப்படுத்த... உங்களுக்கு விருப்பமான வேறொரு துறையில் அவர்களை செலுத்தக் கட்டாயப்படுத்தாதீர்கள்.

## தேவையான வேளையில் தேவை உறுதி!

கல்வி தொடர்புடைய விஷயங்கள் மட்டுமல்லாது... அனைத்துத் துறை விஷயங்களிலும் குழந்தைகளைப் பொறுத்து சட்டதிட்டங்களை அடிக்கடி மாற்றிக் கொள்ளாதீர்கள். ஏனெனில், திடீர் திடீரென புரியப்படும் முடிவு மாற்றங்கள் குழந்தைகளைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடும். உதாரணமாக. நீங்கள் பார்த்து...,பார்த்து செதுக்கிக் கட்டிய வீட்டுச் சுவர்களில் உங்கள் குழந்தை அடிக்கடி ஏதோ கிறுக்கி அசுத்தப்படுகின்றது. குழந்தையின் ஆர்வத்துக்காக, 'போகட்டும், குழந்தைதானே!' என்று ஒருநாள் அதனை அனுமதிக்கும் நீங்கள், இன்னொரு நாள் அதட்டுகின்றீர்கள். உங்களின் இந்த முடிவுத் தடுமாற்றம், இன்னபிற ஆக்கபூர்வ விஷயங்களிலும் உங்களின் மனநிலை குறித்த புரிந்துணர்வின்மையை அவர்கள் மனத்தில் தோற்றுவித்துவிடும்.

அவ்வாறெனில் சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு நம் முடிவுகளை மறுபரிசீலனை செய்யக் கூடாதா? செய்யலாம்..., ஆனால், உங்கள் முடிவின் மாற்றம் குறித்த தாத்பர்ய மேலாண்மையை குழந்தைகளுக்குப் புரிய வையுங்கள். பிறகு அதனை அமல்படுத்துங்கள்.



பாருங்கள்! மறுமுறை ஒரு மாற்ற செயலை செய்ய குழந்தை நாடும்போது உங்களிடம் கலந்தாலோசிக்கும். குறிப்பாக, பாடத்திட்டம் தொடர்பான விஷயங்களில் குழந்தைகளின் இந்த மாற்றம் அதிக பலனைத் தரும். ஏனெனில், உங்களின் உறுதிஇன்மைதான் குழந்தைகளின் கட்டுப்பாடின்மைக்கான ஆணிவேர்!

## மன்னிப்பே மகேசன் வழி..!

குழந்தைகள் குறித்த செயல்பாட்டில் உங்கள் முழக்கம் மன்னிப்போம்.., மன்னிப்பு கேட்போம்.., மன்னிப்பு கேட்கச் செய்வோம்..! என்றிருக்க வேண்டும்.

அதற்கு ஆரம்பமாக முதலில் குழந்தையின் சிறுசிறு தவறுகளை மன்னியுங்கள்..! நாம் செய்யும் தவறுகளை திருந்துவதற்கான வாய்ப்புக்காக மன்னிப்பதாக இறைவனே கூறும்போது, மனிதர்களாகிய நாம் எம்மாத்திரம்? குறிப்பாக, முதலில் பண்பாட்டுசார் அம்சங்களிலும், கல்வி தொடர்பான சிந்தனைசார் எண்ண ஓட்டங்களினூடேயும் மன்னிப்பு மகத்துவமிக்கது.தனது புறத்திலிருந்து மன்னிப்பு கேட்பதன் அவசியத்தை குழந்தைக்கு எடுத்துக் கூறி அழகிய முறையில் கட்டாயப்படுத்துங்கள், அது குழந்தை சகமனிதர்களுக் உண்டாக்கும் தவறாக இருப்பினும் சரி, இறைவனுக்கு மாறு செய்யும் வகையிலான பாவங்களாக இருப்பினும் சரியே! அதற்கு முன்மாதிரியாக, உங்கள் தரப்பிலிருந்து குழந்தைக்கு ஏற்படும் தவறுகளுக்காக மன்னிப்பு கேட்பதில் தயக்கம் காட்டாதீர்கள்.ஏனெனில் மன்னிப்பு கேட்பது நீதியின் அரசாட்சி,இறுமாப்புக் கொள்வது அடக்குமுறையின் தன்னாட்சி!

## மார்க்ககல்வியே வாழ்வின் வளக்கல்வி!

இளமையிலிருந்து உலகக்கல்வியுடன் இணைந்து மார்க்கக்கல்வியை கற்பிப்பதில் பின்தங்கிவிடாதீர்கள். அல்லாஹ்,இறைநம்பிக்கை,இறைத்தூதர்கள், ஒழுக்க விழுமியங்கள் உள்ளிட்ட மார்க்கம் தொடர்பான விஷயங்களை கற்றுத் தாருங்கள். (இது குறித்த விரிவான விளக்கத்துக்கு வசந்தம்,ஜனவரி-பிப்ரவரி 2009 குழந்தைகள் சிறப்பிதழ் காண்க)

தனது குழந்தைப் பருவத்தின் பாதி ஆயுளை ஒவ்வொரு குழந்தையும் பள்ளியில் கழிப்பதால், அதன் ஆசிரியர்களுடன் அவ்வப்போது தொடர்பு கொண்டு குழந்தைகளின் கல்வி,ஒழுக்கம் பற்றி கலந்தாலோசியுங்கள்.

ஆண்டுவிழா எனும் பெயரில் பள்ளிகளில் நடைபெறும் பண்பாட்டு சீரழிவு நிகழ்ச்சிகளில் குழந்தைகளைப் பங்கேற்க செய்யாதீர்கள். இது விஷயத்தில் எந்தவொரு சமாதானம் சொல்லப்பட்டாலும் ஏற்றுக் கொள்ளாதீர்கள்.

இறுதியாக, குழந்தைக் கல்வி முதலே. பணம் சம்பாதிப்பது எப்படி என்பதில் மாணவர்களை கவனம் செலுத்த வைக்கும் நவீன கல்வி முறை, இந்த உலகில் அவர்களை சிறந்த மனிதானாக வாழப் பயிற்றுவிப்பதில் தோல்வியின் பாதாளத்தைத் தொட்டுள்ளது. பாலியல் கல்வியைப் பொதுக் கல்வி பாடத்திட்டத்தில் சேர்க்க ஆர்வம் காட்டும் அரசுகளும் சமூகமும், ஒழுக்கக் கல்வியோடு இணைந்த நவீன கல்வியைத் தர வற்புறுத்துவது கிடையாது.

எனவே, மழலைக் கல்வி இறைஉவப்பை வலியுறுத்தும் சரியான சிந்தனையில்... பரந்த விரிந்த விழுமங்களுடன் செலுத்தப்பட்டால், வாழ்வு மாண்பு பெறும்.வருங்கால மன்னர்களான இத்தகைய ஒழுக்கசீலர்களால், தேசங்கள் ஒழுக்கத்தின் உச்சியை முகரும்.இல்லையெனில், அவர்தம் வாழ்க்கை வழிபிறழ்ந்து காகிதத் தாள்களை மட்டுமே எண்ணும் நரக வாழ்க்கையாகிவிடும்.அத்தகைய போக்கிலிருந்து நம் சமூகம் விடுபட இறையருள் என்றும் துணை நிற்கட்டும். ■

**மு.அ.அப்துல் முஸவ்விர்**
ஆசிரியர்

> எனது மார்க்கம், எனது குடும்பம் எனும் சுயநல குறுகிய வட்டத்தை விட்டும் வெளியேறி, ஏனைய சமூகத்தினர் மீது அக்கறை கொண்ட சற்றே பொதுநலப் போக்கை மனதளவிலாவது கொண்டுவரும் மாற்றமே உண்மை ஐயத்துக்கு கட்டியம் கூறும்!
>
> **வசந்தம்**
> செப்டம்பர் 2008, இதழ் தலையங்கம் - பகுதியில்!

## வாழ்வியலில் கல்வி........!

# வலிமைத் துணை ஒளிர்மை அணை

எழுத்து
மு.அ.அப்துல் முஸவ்விர்

**கல்வி,மனிதன் அடைந்து கொள்ளும் தன்னிகரற்ற சொத்து. அது அவன் இருக்கும் வரை இறக்கும் வரை அவனையும் அவனைச் சார்ந்தோரையும் காத்து கரை சேர்த்து கண்ணியப்படுத்துகின்றது. மேலும், அவர்களது இருமை வாழ்வுதனையும்.... அழகிய முடிவுகளால் அலங்கரிக்கச் செய்கின்றது..!**

கல்வியின் அவசியம் இருவிதங்களில் முக்கியமானது.

ஒன்று: கல்வியின்றி எந்வொரு மனிதனின் அறிவும் முழுமையடைய முடியாது.கல்வி மனிதனை சரியான பாதையில் சிந்திக்கத் தூண்டுகின்றது. அது மனிதனை எப்படி சிந்திக்க வேண்டும், எப்படி முடிவெடுக்க வேண்டும் என்று கற்றுத் தருகின்றது.

இரண்டு: கல்வியை அடைவதன் மூலமே ஒரு மனிதன் வெளிஉலகத்திலிருந்து செய்திகளைப் பெறமுடியும்,கடந்தகால வரலாறுகளைப் புரட்டிப் பார்க்க முடியும்,நிகழ்கால நிகழ்வுகளை நாட முடியும். வருங்கால வாக்கியங்களை வடிக்க முடியும்.

சுருங்கக் கூறின், கல்வியில்லாமல் மனிதன், மூடிய அறையைப் போன்றவன். கல்வியறிவு பெற்றவனோ, வெளிஉலகிலிருந்து, காற்று புகும் சாளரங்களும், வெளிச்சம் விளையாடும் தாழ்வாரங்களும் அமைந்த அறையைப் போன்றவன். அதனால்தான் இஸ்லாம் கல்வியை மனித அறிவுடன் தொடர்புபடுத்தி முன்னிலைப்படுத்துகின்றது.


இறைவேதம் திருக் குர்ஆன் "ஓதுவீராக!" என்று அறிவுடன் இணைந்து கல்விக்குரிய வசனத்தைத் தாங்கியே முதன் முதலில் இறங்கியது. அதாவது, மனித வாழ்வின் செயல்பாட்டு துவக்கம் கல்வியிலிருந்தே ஆரம்பம் என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டான் ஈடிணையில்லா படைப்பாளன்! அதுவே, அறிவை முன்னெடுத்துச் செல்வதற்கான முதல்படி!அறிவைத் தேடிப் பெறுவது என்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமை, அவர் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரியே!

திருக் குர்ஆனின் பல்வேறு வசனங்களும் அறிவை முன்னிறுத்திப் பேசுவதைக் காண இயலும்.

நூற்றாண்டுக்கால மன்னர் வழி ஆட்சி,காலனியாதிக்கம்,சொந்த மண்ணில் சொந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி அரசுகளின் அராஜகம் ஆகியன உலகம் முழுவதும் பரவியிருந்த மக்களின், குறிப்பாக முஸ்லிம்களின் ஒழுக்க,ஆன்மிக நிலைமைகளின் தாத்பர்ய கோட்பாடுகளின் மீது பெரும் தாக்கம் செலுத்தியது. அந்தத் தாக்கத்தினால், ஏற்பட்ட பின்னடைவை சரிசெய்ய நாடி முஸ்லிம் சமூகம் கல்வி நிலை குறித்த அம்சங்களுக்கு இஸ்லாமிய வரைமுறைக் கோட்பாட்டின் அடிப்படையில் முன்னுரிமை தரவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது. அதேவேளை, சமகாலத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடி அதற்கான முயற்சிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

முழுமையான வெற்றி என்று ஒப்புக்கொள்ள இயலாவிட்டாலும், இன்றைய தினம் கல்வித்துறை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இன்றைய தலைமுறையினர் காணும் வசதிகளும் முன்னேற்றங்களும் அத்தகைய முயற்சிகளின் பிரதிபலனே எனில் அது மிகையல்ல! குறிப்பாக நடுநிலை சமுதாயம் என இறைவனால் வருணிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தை நோக்கி, நவீன நாகரிக உலகம் விடும் சவால்கள் அந்த சமூகம் கல்வித்துறையில் தனது மறுசீரமைப்புக் கட்டுமானத்தை ஆக்கபூர்வ வகையில் செய்ய வேண்டியிருக்கின்றது.அவ்வேளை, தனது ஆன்மிக சட்டரீதியான அம்சங்கள் சிறிதளவும் பாதிக்கப்படாமல் இருப்பதிலும் கவனம் செலுத்த வேண்டியதும் அதன் முக்கிய பொறுப்பாகவும் இருக்கின்றது.

ஆம்! இன்றைய சமூகம், குறிப்பாக முஸ்லிம் சமூகம் எத்தகைய கல்விநிலையை நாடி நிற்கின்றது? எமக்கு ஒரு முஸ்லிம் தத்துவஞானி தேவைப்படுகின்றார், தத்துவார்த்த கொள்கைகளை சீராக கொண்டு செல்ல! முஸ்லிம் விஞ்ஞானி தேவைப்படுகின்றார், இறைநியதிக்கு மாற்றமில்லாத வகையில் மனிதஅறிவு பெற வேண்டிய உன்னத இரகசியங்களை அளக்க..!ஒரு முஸ்லிம் பொருளாதாரப் புலி தேவைப்படுகின்றார்,உலகம் இன்று நாடி நிற்கும் உண்மை இஸ்லாமிய பொருளாதார


குறிப்பிட்ட சமூகம் சார்ந்த கவனிப்பிலேயே கல்விநிலை சுழல்வதால், முழுமையான பயன் அனைவருக்கும் கிட்டுவது குறைவாகவே இருக்கின்றது.


அமைப்பை அமல்படுத்திக் காட்ட..!ஒரு முஸ்லிம் நீதிபதி வேண்டப்படுகின்றார்,இறைநியதிச் சட்டங்களை நியாயமாக நிலைநிறுத்திக் காட்ட..! ஒரு முஸ்லிம் அரசியல்வாதி உலக அரங்கில் உலா வர நாடப்படுகின்றார், சாக்கடை அரசியலை சுத்தப்படுத்திட..! சுருங்கக் கூறின் உலகவாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் இறைதேட்டப்படி இயைந்து செயல்பட பல்துறை சார்ந்த "இஸ்லாமிய ஆளுமைகள்" தேவைப்படுகின்றன, அதன் மூலம் சமூக மறுசீரமைப்புக் கட்டுமானத்தை இறைசார் அம்சப்படி மலரச் செய்ய..!

ஆம்..! அந்த கட்டுமானம் எப்படிப்பட்டது தெரியுமா? மதீனாவில் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஏற்படுத்திக் காட்டிய மறுமலர்ச்சிக் கட்டுமானம் அது!

சாதாரணமாக நபித்தோழர்கள் ஒன்றாக கூடுமிடத்திலிருந்து ஆரம்பித்து, மதீனத்து அன்ஸாரிகளின் அஞ்ஞானக்கால நடைமுறைகள் வரை அனைத்தையும் இஸ்லாமிய நன்னெறிக்குடையின் கீழ் அவர் கொண்டுவந்த அத்தகைய அறிவுப்பூர்வமான மறுமலர்ச்சிக் கட்டுமானம்!

உலகம் தோன்றி.. முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்ட காலத்திலிருந்தே அறிவைத் தேடிப் பெற வேண்டிய திட்டம் இறைவனால் நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டது என்பதே உண்மை. ஆதம் (அலை) அவர்களே உலகின் முதல் மாணவர், ஏகஇறைவனே முழுமுதல் ஆசான்!

ஆதம் (அலை) அவரகளைப் படைத்த பின்னர்.. அவருக்கு சிரம் பணியுமாறு வானவர்களை இறைவன் பணித்தபோது அனைவரும் உடனே கட்டுப்பட்டார்கள், இப்லீஸ் எனும் நயவஞ்சகனைத் தவிர! மண்ணுக்கு முன்பாக நெருப்பு



# கடைச் சரக்கா, கல்வி?

## கல்வியின் உன்னத மேலாண்மையை உலகியல் இலாபங்களிடம் அடகு வைத்துவிட்ட நிலை..!

மண்டியிடுவதா? கொக்கரித்தான் சாத்தான்! ஆனால், பிற வானவர்கள் ஆதம் (அலை)-க்கு சிரம் பணிவதை வேறு கோணத்தில் கண்டார்கள். முதலில் அது அவர்களைப் படைத்த ஏகனின் கட்டளை! அடுத்து, ஒரு ஆசானாக இருந்து ஆதத்துக்கு அவன் கற்றுத்தந்தவை! இதனை இறைவனுக்கும் வானவர்களுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் மூலம் திருக் குர்ஆன் இவ்வாறு வருணிக்கின்றது:

ஸினூ.ஃ.பா அன்ஸார்
துணை ஆசிரியர்

ஓ, இளைஞனே..!

நல்லறிவுத் தூறல்களை
இலட்சியப்
பெருவெள்ளமாக்கி,

இனிய வாழ்வை இங்கிதம்
கொண்டமைத்து

இருமை வாழ்வையும்
இதம் கொள்ளச்
செய்வாய்!

வசந்தம்
ஆகஸட் 2008
கவிதை - பகுதியில்..!





Q

## இந்தப் படத்திலுள்ள பென்சிலின் நீளம் என்ன?




விடை

அ. 6 செ.மீ. இ. 4 செ.மீ.
ஆ. 5 செ.மீ. ஈ. 3 செ.மீ.

A

### முடிவு

அளவுகோலின் வலதுபுறத்திலிருந்து அளவெடுக்க வேண்டும் என்பதுதான் சரி! இடதுமுனை பூஜ்யத்தில் இல்லையெனில் எடுக்கக்கூடாது என்பது தெரிந்திருக்க வேண்டும். இதுபோன்ற தவற்றை குழந்தை மீண்டும் மீண்டும் செய்தால், கணிதப் பாடம் மட்டுமல்ல, வாழ்க்கைக் கணக்கும் சரியாகாது!

*..பின்னர், அல்லாஹ் எல்லாப் பொருள்களின் பெயர்களையும் ஆதத்துக்குக் கற்றுக்கொடுத்தான். பிறகு அவற்றை வானவர்களின் முன் வைத்து "(ஒரு பிரதிநிதியை நியமித்தால் பூமியில் ஒழுங்கமைப்பு சீர்குலையும் எனும்) உங்கள் கருத்து சரியானால், இவற்றின் பெயர்களைச் சற்று சொல்லுங்கள்" எனக் கூறினான்.*

*'குறை ஏதுமில்லாத தூயவன் நீயே! நீ எங்களுக்குக் கற்றுக் கொடுத்ததைத் தவிர வேறு எதுவும் எங்களுக்குத் தெரியாது. உண்மையில், நீ மட்டுமே பேரறிவும் மிக்க ஞானமும் உடையவன்!" என்று அவர்கள் கூறினார்கள். (பின்னர்) இறைவன் கூறினான்: 'ஆதமே! இவற்றின் பெயர்களை நீர் அவர்களுக்கு அறிவியும்!" அவர் அவற்றின் பெயர்களை அவர்களுக்கு அறிவித்ததும், 'வானங்களிலும்,பூமியிலும் (உங்களுக்கு) மறைந்திருக்கக்கூடிய (உண்மைகள்) அனைத்தையும் நிச்சயமாக நான் நன்கறிவேன். மேலும், நீங்கள் வெளிப்படுத்தக்கூடியவற்றையும். மறைத்துக்கொண்டிருப்பவற்றையும் நான் நன்கறிவேன் என்று உங்களிடம் நான் கூறவில்லையா?" எனக் கேட்டான். பின்னர்,"நீங்கள் ஆதத்துக்குப் பணியுங்கள்!' என்று வானவர்களுக்கு நாம் கட்டளையிட்டபோது அவர்கள் எல்லாரும் பணிந்தார்கள், இப்லீஸைத் தவிர! அவன் மறுத்தான். மேலும் ஆணவம் கொண்டுவிட்டான், நிராகரிப்பவர்களில் ஒருவனாகவும் ஆகிவிட்டான்.*

*திருக்குர்ஆன் 2:31-34*

ஆம்! அறிவுப்பெறுதலின் ஆரம்ப அத்தியாயத்துக்கு ஆதம் (அலை) படைக்கப்பட்டதிலிருந்தே முன்னுரை எழுதப்பட்டுவிட்டது.

ஒருவருடைய வாழ்வில் இத்தகைய அறிவுசார் கல்வி தவிர்க்கப்பட முடியாத அம்சமாகும். இன்றைய உலகம் கல்வியை இரண்டாகப் பிளவுபடுத்தி, மார்க்கக் கல்வி, உலகக் கல்வி என்று நிறுத்தியிருக்கின்றது. தினசரி நடைமுறை வாழ்வுக்கு உலகக் கல்வி தேவைப்படும் வேளையில், மனித வாழ்வின் உண்மை வெற்றிக்கான வழிகோலாக அந்தக் கல்வி பயன்படுத்தப்பட.., இப்புவியிலும் அதன் பின்னர் வரும் மறுமையிலும் பூரண ஜயம் ஈட்ட மார்க்கக் கல்வி அவசியம்!

ஆனால், இன்று நிலைமை என்ன? இருதுறை கல்வியும் இருதிசைகளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றன. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் உலகக் கல்வி வியாபார நோக்குடனும், மார்க்கக் கல்வி பிறர் தயவுநாட்டத்துடனும் அளிக்கப்பட வேண்டிய துரதிருஷ்ட நிலை. இதனால், பெரும்பாலும் வசதி படைத்தவர்கள் வீட்டுப் பண்ணையாளனாக இருக்கும் கல்வி, ஏழையின் வீட்டில் எஜமானனாக கோலோச்ச வேண்டிய நிலை!

இருப்பினும் இந்தியா போன்ற நாடுகளில் இருக்கும் முஸ்லிம் அல்லாத அரசுகள் ஏற்படுத்தித் தந்திருக்கும் வசதிகளைப் பயன்படுத்தி இந்தியர்கள் குறிப்பாக இந்திய முஸ்லிம்கள் பல்துறைகளிலும் சாதனை ஏற்படுத்தியிருப்பதையும், கேரள மாநிலம் 100 சதவீதம் கல்வியறிவு பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சம்.

போர்ச்சூழல்கள் மலிந்து, வாழ்க்கை நிம்மதியற்ற போக்காக மாறிய நிலையில் இலங்கை மக்கள் 99 சதவீதம் தேசிய கல்வி அறிவு பெற்று முன்னணியில் நிற்கின்றார்கள்.இலங்கை முஸ்லிம்கள் கல்வி நிலையும் குறிப்பிடத்தக்க அளவில் போற்றத்தக்கதாக இருப்பதும் பெருமைக்குரிய விஷயமே!

எனினும் குறிப்பிட்ட சமூகம் சார்ந்த கவனிப்பிலேயே கல்விநிலை சுழல்வதால், முழுமையான பயன் அனைவருக்கும் கிட்டுவது குறைவாகவே இருக்கின்றது.

## ஆணுக்கு மட்டுமா கல்வி..!

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை இந்த நவீன உலகிலும் "அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு?" எனும் மனோபாவம் பரம்பரைசார் குடும்பங்களில் கோலோச்சிக் கொண்டுதானிருக்கின்றது.இஸ்லாமிய நாகரிகப் பண்பாட்டுத் தடத்தில் நிர்மாணிக்கப்பட்ட அமைப்பு முறை குறித்து அறிவில்லாது... பண்டைக்கால அஞ்ஞானக்கால சிந்தனைகளை கல்வித்துறைகளிலும் முன்நிறுத்தும் அவலநிலையை என்னென்பது?

ஆனால், மார்க்க வரைமுறைக்குள் பெண்கல்விக்கான அனுமதி எங்கும் மறுக்கப்படவில்லை.

*அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவருக்கு அடிமைப் பெண் இருந்து, அவருக்கு நல்ல ஒழுக்கங்களைக் கற்பித்து, நல்ல கல்வியைப் பெறச் செய்து பிறகு அவரை மணமுடித்துக் கொள்கின்றார் எனில் அவருக்கு இருமடங்கு நற்கூலி உண்டு. அதேபோல் இறைவனின் உரிமையையும், தனது எஜமானனின் உரிமையையும் உணர்ந்து செயல்படும் அடிமைக்கும் இருமடங்கு நற்கூலி உண்டு.*


*அறிவிப்பாளர்: அபூமூஸா அல்-குத்ரீ (ரலி)*

*ஆதாரம்: புகாரி*

பாருங்கள்! அடிமைப் பெண்ணுககே கல்வியறிவை அளிக்க விரும்பும் இஸ்லாம், கல்வி மிக

**குறிப்பிட்ட சமூகம் சார்ந்த கவனிப்பிலேயே கல்விநிலை சுழல்வதால், முழுமையான பயன் அனைவருக்கும் கிட்டுவது குறைவாகவே இருக்கின்றது.**

**கல்வி** ஐ.நா.சபை சர்வதே மனிதவ





## கல்விச் சிறப்பிதழ்

அத்தியாவசியத் தேவையாகிவிட்ட இக்காலங்களில் மகளிர் கல்விக்கு முட்டுக்கட்டை போடுமா என்ன?

அண்ணலார் (ஸல்) அவர்களின் அருமைத் துணைவியார் கதீஜா (ரலி) அவர்கள் ஒரு தேர்ந்த வணிகப் பெண்மணியாக இருந்ததும்,மற்றொரு மனைவியார் ஆயிஷா (ரலி) அவர்கள் அதிகமான நபிமொழிகளை அறிவித்த பெண்மணி எனும் மதிப்பிலும் விளங்கியது அவர்தம் அறிவுக்கூர்மைக்கும், கல்விசார் கட்டியத்தன்மைக்கும் உன்னத சான்றுகளல்லவோ?

பொருளாதார சிக்கல்களும், நெருக்கடிசார் நிலைமைகளும் மலிந்துவிட்ட இன்றைய உலகில் கல்வியறிவில் பழுந்தின்று கொட்டை போட்டவர்களே நிலை தடுமாறும் நிலையில்.., சராசரி அவசியக் கல்வியும் பெறாது இருப்பின் நம் நிலை என்னாவது? கல்விக்கான தாத்பர்ய முக்கியத்துவத்தை இஸ்லாம் உணர்த்திய அளவுக்கு வேறு எந்த கொள்கையோ, தத்துவமோ உணர்த்தியதில்லை.

அதேபோல், அண்ணலார் (ஸல்) அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் கொண்டே இஸ்லாத்துக்கும் கல்விக்கும் இடையேயுள்ள அத்தியாவசிய தொடர்பை உணர முடியும்.

சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கு எதிராக சத்தியநெறியின் முதல் அறப்போர்! தர்மம் வென்ற பத்ர் எனும் அப்போரில் தோல்வியுற்று போர்க்கைதிகளாக பிடிபட்ட அசத்தியவாதிகளில் சிலர் கல்வியறிவு பெற்றவர்கள் . அவர்களின் விடுதலைக்கு பணயத்தொகையாக தந்து தங்களை விடுவித்துக் கொள்ள அண்ணலார் (ஸல்) முன்வைத்த நிபந்தனை என்ன தெரியுமா? ஒவ்வொருவரும் மதீனத்து சிறுவர்கள் பத்து பேருக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தரவேண்டும் என்பதே!

இதுவே இஸ்லாமிய உலகின் முதல் பள்ளிக்கூடம், அதுவும் போர்க்கைதிகளான முஸ்லிமல்லாதவர்களை ஆசிரியர்களாகக் கொண்டு முஸ்லிம் குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது. இங்கு கவனிக்கத்தக்க முக்கிய அம்சம் என்னவெனில், தங்கள் பணி முடிவுற்றவுடன் அவர்களுக்கு விடுதலை கிடைத்து திரும்பிச் சென்றால், மீண்டும் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் விரோதமாக செயல்படமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லை என்பது அண்ணலார் (ஸல்) அவர்களுக்குத் தெரியும். இருப்பினும் கல்வியறிவு பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும்போது முஹம்மத் (ஸல்) அவர்கள் அதனைத் தவறவிடவில்லை, அது எத்துணை ஆபத்தான சூழலில் கிடைக்கப் பெற்றாலும் சரியே!

இன்னொரு உதாரணம் கற்பனையிலும் நினைத்துப் பார்க்க முடியாத அம்சம்.தன்னை மணமுடிக்கத் தேவையான 'மஹ்ர்' எனும் அவசிய ஆகுமான தேவையை முன்வைக்கும் மணமகளுக்குத் தர தன்னிடம் பொருளாதார ரீதியாக எதுவும் இல்லாத நிலை ஒரு நபித்தோழருக்கு! அவருடைய முழுமனதுடனான ஒப்புதலுடன் திருக் குர்ஆனின் ஒரு அத்தியாயத்தையேனும் அவளுக்குக் கற்றுத்தருவதையே 'மஹ்ர்'-ஆக தரச் சொன்னார்கள் அண்ணலார் (ஸல்) அவர்கள்.


பாருங்கள்! வாழ்க்கை ஒப்பந்த விஷயத்திலும் கற்றலின் முக்கியத்துவத்தை இஸ்லாம் பயன்படுத்திக்கொண்ட அழகிய வழிமுறையை!

ஆனால், இன்றைய நிலை என்ன?

பொருளாதார வளர்ச்சிக்காக மட்டுமே கல்வியைப் பயன்படுத்தி அதனைக் கடைசரக்காக ஆக்கி... கல்வியின் உன்னத மேலாண்மையை உலகியல் இலாபங்களிடம் அடகு வைத்துவிட்ட நிலை..!

எனவே, இஸ்லாம் வலியுறுத்தும் உலகியல் பாடத் திட்டத்தோடு இணைந்த மார்க்கக்கல்வி ஒழுங்குமுறையே இந்த உலகை அறிவின் இமாலய உச்சியைத் தொட வைக்க முடியும், இருமைஉலக வெற்றிக்கான ஆயத்தங்களோடு! அதனை ஆரத்தழுவி நிற்க இறையருள் என்றும் துணைநிற்கட்டும்!

...தேச கல்வியறிவு குறித்த
...வள மேம்பாட்டு புள்ளிவிவர அறிக்கை



...evelopment Report
...07/2008

## Q

### இறுதி இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்த இடம் எது?

அ. அரபு தேசம்

ஆ. ஸவூதி அரேபியா

இ. மதீனா

ஈ. மக்கா மாநகரம்

## A


### முடிவு

‘இ-ஐத் தவிர அனைத்தும் ஏறக்குறைய சரியான விடைகள்தாம். ஆனால்,பிறந்த ‘இடம்’ என்று கேட்கப்பட்டிருப்பதால், மக்கா மாநகரம் என்பதே மிகச் சரியான விடை! குழந்தை இந்த விடையைச் சரியாகச் சொல்வதில்தான் மார்க்க அம்சம் குறித்த அதன் ஆழ்ந்த அறிவு மற்றும் மற்றும் தொலைநோக்குப் பார்வை அடங்கியிருக்கின்றது.

முஹம்மத் ஹுஸைன்
ஆசிரியர் குழுமம்

ஒருவன் சத்தியத்தை இலவசமாக, அற்புதமான விதத்தில் பெற்றுக்கொள்ள முடியாது! அதனைத் தேடி, நாடிச் செல்ல வேண்டும். அந்தப் பாதையில் சிரமங்களும்,இழப்புக்களும், அச்சுறுத்தல்களும் ஏற்பட வாய்ப்புக்கள் ஏராளம்!


வசந்தம்
ஜனவரி 2008 இதழ்
வரலாறு பகுதியில்..!



2007-08
புனித ரமளான்
அமர்வுகள்
ஒளிப்படக் காட்சிகள்
ரவ்தா
இலங்கை தூதரகம், சால்மியா


2007-08
IPC
لجنة التعريف بالإسلام
فرع السالمية
மகளிர்ப் பிரிவு
ரவ்தா



2007-08
மகளிர்ப் பிரிவு
உணவுப் பொருட்கள்
வழங்கும் நிகழ்ச்சி
புனித ரமளான்


2007-08
திருக் குர்ஆன்
மனனப்போட்டி
ரவ்தா
மற்றும்
தலைமையகம்


2008
வசந்தம்


புனித ரமளான்
2007-08
கிளைகள்
தலைமையகம்
TWO THOUSAND


2007-08
தலைமையகம்
மற்றும்
கிளைகள்
لجنة التعريف بالإسلام


Dr. ஜாகிர் நாயக்
CONCEPT OF G
2007-08
சிறப்பு நிகழ்வுகள்

பெரும்பாவங்கள் - 3

# ஏன் கூடாது இணைவைப்பு?



எழுத்து
N.M.M. ஹுஸைன்

இவைகள் இறுதி வேதம் முன் வைத்த உறுதிச் சான்றுகள். ஞாலத்தினாலும் காலத்தினாலும் மாறிப் போகாத இவைகள் மறை வழி வகுத்த இறைமொழிகள்.

நீர் அவர்களிடம்
கூறுவீராக:'அல்லாஹ்வை
விடுத்து உங்களுக்கு இழப்பையோ
இலாபத்தையோ அளிப்பதற்கு
சக்தியில்லாதவற்றையா நீங்கள்
வணங்குகின்றீர்கள்? ஆனால்,
அல்லாஹ்தான் யாவற்றையும்
செவியேற்பவனும் நன்கு அறிபவனும்
ஆவான்'.
திருக்குர்ஆன் 5:76

(நபியே!) நீர் அவர்களிடம்
கேளும்:'அல்லாஹ் உங்களின்
செவிப்புலனையும் பார்வைப்புலனையும்
பறித்து உங்கள் இதயங்களிலும்
முத்திரையிட்டுவிட்டால் அல்லாஹ்வைத்
தவிர வேறு எந்தக் கடவுளால்
இவ்வாற்றல்களை உங்களுக்குத்
திரும்பத் தர முடியும் என்பதை நீங்கள்
சிந்தித்தீர்களா?
திருக்குர்ஆன் 6:46

இருந்தும் மக்கள்
ஜின்களை அல்லாஹ்வுக்கு
இணையாக்கிவிட்டார்கள்.உண்மை
யாதெனில், அவன்தான் அந்த
ஜின்களைப் படைத்தவன்.
திருக்குர்ஆன் 6:100



அல்லாஹ்வை விடுத்து எவற்றை
நீங்கள் அழைக்கின்றீர்களோ அவை
உங்களைப் போன்ற படைப்பினங்களே!
அவற்றிடம் பிரார்த்தனை செய்து
பாருங்கள்!அவற்றைப் பற்றி உங்கள்
எண்ணங்கள் சரியாக இருந்தால்,அவை
உங்கள் அழைப்பை ஏற்று பதில்
தரட்டுமே!அவற்றிற்குக் கால்கள்
இருக்கின்றனவா நடப்பதற்கு?கரங்கள்
இருக்கின்றனவா, பிடிப்பதற்கு?
கண்கள் இருக்கின்றனவா
பார்ப்பதற்கு?காதுகள் உள்ளனவா
கேட்பதற்கு?
திருக்குர்ஆன் 7:195

...அல்லாஹ்வை விடுத்துஅவர்கள் அழைத்த
வண்ணமிருந்த அவர்களுடைய கடவுள்கள்
அவர்களுக்கு எந்த பயனும் அளிக்கவில்லை.
நாசத்தைத் தவிர வேறு எந்தப் பயனையும்
அவை அவர்களுக்குத் தரவில்லை.
திருக்குர்ஆன் 11:101

(நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!)
பல்வேறுபட்ட கடவுளர்கள்
சிறந்தவர்களா? அல்லது யாவற்றையும்
அடக்கியாளுகின்ற ஏகஇறைவனாகிய
அல்லாஹ் சிறந்தவனா?
திருக்குர்ஆன் 12:39

...அவனைத் தவிர இவர்கள்
அழைக்கக்கூடிய வேறு கடவுள்களால்
இவர்களின் அழைப்புக்கு எவ்வித
பதிலும் அளிக்க முடியாது.
திருக்குர்ஆன் 13:14

மேலும், அல்லாஹ்வை விட்டுவிட்டு
எவர்களை(த் தெய்வங்களாக)
மக்கள் அழைக்கின்றார்களோ,
அவர்கள் எந்தப் பொருளுக்கும்
படைப்பாளர்கள் அல்லர். மாறாக,
அவர்களை படைக்கப்பட்டவர்களாவர்.
அவர்கள் இறந்துபோனவர்களே தவிர
உயிருள்ளவர்கள் அல்லர்.
அவர்கள் எப்போது (மீண்டும் உயிர்
கொடுக்கப்பட்டு) எழுப்பப்படுவார்கள்
என்பதையும் அறியமாட்டார்கள்.
திருக்குர்ஆன் 16:20-22

இவர்களிடம் கூறும்:"அல்லாஹ்வை
விடுத்து (உங்கள் காரியங்களை
நிறைவேற்றுபவர்களாய்)
எந்தக் கடவுளர்களை நீங்கள்
கருதுகின்றீர்களோ அவர்களை
அழைத்துப் பாருங்கள்! உங்களின்
எந்தத் துன்பத்தையும் அவர்களால்
அகற்றிவிட முடியாது. மாற்றிவிடவும்
முடியாது.
திருக்குர்ஆன் 17:56

இவர்கள் உருவாக்கிய பூலோக
தெய்வங்கள் (உயிரில்லாதவற்றிற்கு
உயிர்கொடுத்து) எழுப்பிக்
கொண்டுவரக்கூடியவையா, என்ன?
திருக்குர்ஆன் 21:21

நமக்கு எதிராக அவர்களைப்
பாதுகாக்கக்கூடிய வேறு கடவுள்கள்
அவர்களுக்கு இருக்கின்றார்களா,
என்ன? அவை தமக்கே உதவி செய்ய
முடியாதவையாக இருக்கின்றன.
திருக்குர்ஆன் 21:43

அல்லாஹ்வை விடுத்து நீங்கள் எந்தக்
கடவுள்களை அழைக்கின்றீர்களோ,
அக்கடவுள்களை அனைவரும்
சேர்ந்து ஓர் 'ஈ'-யைப் படைக்க
விரும்பினாலும் படைக்க முடியாது! ஏன்
ஈ, அவர்களிடமிருந்து எதையேனும்
பறித்துக் கொண்டு போனாலும்கூட
அதனிடமிருந்து அதனை விடுவிக்கவும்
அவர்களால் முடியாது.உதவி
தேடுகின்றவர்களும் பலவீனர்களே!
உதவி தேடப்படுபவர்களும்
பலவீனர்களே!
திருக்குர்ஆன் 22:73

அடுத்த இதழில் தொடரும்...
இறைநாடினால்..!



# கல்வியின் பசுமை, அனுபவிப்பின் சுகஇனிமை!



எழுத்து
முஹம்மத் ஜாபிர்

**இஸ்லாமியக் கல்வி, உலகாயதக் கல்வி இரண்டும் இரு கண்களைப் போன்றது, மனித வாழ்விற்கு.! கல்வியுடன் கட்டுண்டு கட்டவிழ்க்க முடியா முடிச்சுக்களை ஒருவன் வாழ்வில் இடுவது கடமை! பிறகு அது அவன் உடைமை!!**

இஸ்லாமிய அறிவூட்டல் என்பது, அறியாமையை விரட்டுவதும், தீமைகளைக் களைவதும் ஆகும். வெற்றி பெறுவதற்கான பல வழிகள் உள்ளன. அவற்றில் திருக் குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையில் இஸ்லாமிய அறிவைப் பெற்றுக் கொள்வதும் ஒன்று! அதுவே அனைத்து வழிமுறைகளிலும் சிறந்த வழிமுறையாகும்.அவ்வாறு அறிவை நாடி நாம் போகும்போது நம்முடைய வாழ்வில் வெற்றி,ஏனைய மனிதர்களுடனான தொடர்பு மற்றும் பிறருக்கு கற்றுக் கொடுத்தல் ஆகியவற்றுக்காக நமது தேடல் அமைகின்றது.

இந்தத் தேடுதல் பயணத்தின்போது, உலக அறிவைத் தேடும் விஷயத்தில் மட்டும் நமது நேரத்தை, பொருளை, உழைப்பை செலவழிப்பதோடு, நம்முடைய உணர்வுகளையும், பொறுமை மற்றும் சகிப்புத் தன்மையையும் கருத்தில் கொள்பவர்களாக இருக்கின்றோம்.

நாம் தேடிப் பெற வேண்டிய செல்வங்களிலெல்லாம் மிகச் சிறந்ததும், தலையாயதுமானதாக இருக்கும் செல்வம் நம் இருமை வாழ்வையும் செம்மைப்படுத்தும் மார்க்க அறிவுச் செலவமே! அது நம்முடைய தலைமுறைகளுக்கு கொண்டு போய்ச் சேர்ப்பதற்கும் நம்மீது கடமையாக்கப்பட்டுள்ளதொரு செல்வமாகும்.

நாம் பொறுப்பாக உள்ள நமது குடும்பத்தவர்களின் வெற்றி மற்றும் தோல்வி குறித்து நாம் விசாரிக்கப்படுவோம். அத்தகைய வெற்றியும் தோல்வியும் அவர்கள் பெறும் இஸ்லாமிய அறிவை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது திண்ணம். இது குறித்து இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் நம்மை இவ்வாறு எச்சரித்திருக்கின்றார்கள்!

*'உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள்! தம் பொறுப்பின் கீழ் உள்ளவர்கள் பற்றி ஒவ்வொருவரும் விசாரிக்கப்படுவீர்கள்...'*

மேற்கண்ட நபிமொழிகளில் இருந்து ஒரு குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தெளிவாக நமக்குக் கூறியிருப்பது விளங்கும்.

*'ஆயிரம் வணக்கவாளிகளை விட ஒரு கற்றறிந்த மார்க்க அறிஞருக்கு எதிராகத்தான் ஷைத்தான் அச்சமடைகின்றான்' அறிவிப்பாளர்: அப்துல்லா இப்னு அப்பாஸ் (ரலி) ஆதாரம்: திர்மிதி*

இறைநம்பிக்கையாளர்களின் மிகச் சிறந்த பண்பு என்னவென்றால், கல்வியைத் தேடிச் சென்று பெற்றுக் கொள்வதாகும். கீழ்க்கண்ட நபிமொழியானது ஒரு மனிதர் தொடர்ந்தும் கல்வியைத் தேடிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

*'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "பயன்தரத்தக்க கல்வியைத் தேடுவதில் ஒரு இறைநம்பிக்கையாளர் (போதும் என்ற நிலையில்) திருப்தி அடைந்து விட மாட்டார், அவர் மரணமடையும் வரைக்கும் அதனைத் தேடிக் கொண்டே இருப்பார், இன்னும் (அதன் காரணமாக) அவர் சுவனத்தில் நுழைந்திடுவார். அறிவிப்பாளர்: அபூ ஸயீத் அல் குத்ரி (ரலி) ஆதாரம்: திர்மிதி*

அப்துல்லா பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள் :

*'ஐந்து விஷயங்கள் குறித்து ஒருமனிதனிடம் மறுமைநாளில் வினவப்படும்: ௧. அவனது வாழ்க்கை, அதனை எவ்வாறு செலவழித்தான், ௨. அவனது இளமை, ௩. அவன் எவ்வாறு முதுமைப் பருவத்தை அடைந்தான், ௪. அவனது செல்வம், அதனை எவ்வாறு பெற்றான், இன்னும் அதனை எவ்வாறு செலவழித்தான், ௫. இன்னும் அவன் பெற்றிருந்த அறிவை வைத்து அவன் என்ன செய்தான் என்பது குறித்தும் வினவப்படுவான். ஆதாரம்: திர்மிதி*

நாமும் இஸ்லாமியக் கல்வியைக் கற்பதோடு,அதனை நாம் பொறுப்பாக உள்ளவர்களிடமும் பகிர்ந்து கொள்ளும்பொழுது, நாம் பெற்ற கல்வியினை பயனுள்ள முறையில் கழித்ததற்காக இறைவனிடம் நற்பாக்கியத்திற்கு உள்ளவர்களாவோம். இன்னும் நாமும், நம்முடைய பிள்ளைச் செல்வங்கள் உட்பட நாம் பொறுப்பாக உள்ளவர்களும் மறுமை நாளிலே ஏற்படவிருக்கின்ற சோதனையான கட்டங்களில் வெற்றி பெறும் கூட்டத்தினராவோம். இத்தகையோர்களுக்குத் தான் சுவனம் தயார்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது என்று இறைவன் நல்லடியார்களுக்குச் நற்செய்தி வழங்கியிருக்கின்றான். அதனை நாம் அடைய இறையருள் என்றும் துணை நிற்கட்டும்!



**அமீர் ஹஸன் நைனார்**
ஆசிரியர்குழுமம்

பொதுவாக, மதங்கள் மனிதனை செம்மைப்படுத்துகின்றன என்பது உலகநோக்கு! அதில், இஸ்லாம், உலக வாழ்க்கை மட்டுமல்ல, மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கை குறித்தும் பேசி மனிதனை உண்மையான வெற்றியாளனாக்குகின்றது.

**வசந்தம்**
பிப்ரவரி 2008, இதழ் வரலாறு பகுதியில்..!



# உன்னை மீறிய ஒரு சக்திக்கு சிரம் பணிவாய்!ஐயம் பெறுவாய்!!

எழுத்து
Dr. ஜாகிர் நாயக்

தமிழில்
இளவேனில்



மனிதனின் கரங்கள் உருவாக்கிய நூற்களை மனிதனே எவ்வாறு பின்பற்றுவது? மனித ஞானம் பலவீனம் கொண்டது,உணருவாய் மனிதனே! உன்னை மீறிய ஒரு சக்திக்கு அடிபணிவாய்!!சிரம் பணிவாய்! ஐயம் பெறுவாய்!!

### 2. சமஸ்கிருத இலக்கியம்

சமஸ்கிருத இலக்கிய நூல், பவுத்த மதத்தின் மஹாயான பிரிவினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. பாலி இலக்கியம் போல இந்த சமஸ்கிருத இலக்கிய நூல், ஒரு தொகுப்பாக சுருக்கப்படவில்லை. சமஸ்கிருத மூலநூல் கிடைக்கவில்லை. அவற்றில் சில சீனமொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பிறகு மீண்டும் சமஸ்கிருத மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டன.

#### 1. மஹாவாஸ்து:சிறப்புக் கதைகள்

மஹாவாஸ்து சமஸ்கிருத மொழியில் மிகவும் பிரபல்யமானது. இது சீன மொழியிலிருந்து மறுமொழியாக்கம் செய்யப்பட்டதாகும். பல்வேறு தொகுதிகளைக் கொண்ட பழங்கதைகளின் தொகுப்பு இது!

#### 2. லலிதாவிஸ்தாரா

சமஸ்கிருத இலக்கியத்தில் மிகவும் புனிதமானவைகளுள் ஒன்று இது. புத்தரின் இறப்புக்கு 500 ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது முதல் நூற்றாண்டு காலகட்டத்தைச் சார்ந்தது.பவுத்தர் மேல் ஆழிய அன்பு கொண்ட மக்கள் அவர் மீது சமர்ப்பித்துக் கூறிய அற்புதங்களைக் கொண்டது இது!

### 2..கவுதம பவுத்தரின் அறிவுரைகள்

#### அ. உயர்நோக்கு உண்மைகள் Noble Truth

கவுதம பவுத்தரின் அடிப்பபடை அறிவுரைகள் 'நான்கு உயர்நோக்கு உண்மைகள்' என பௌத்த மதத்தினரால் வழங்கப்படுகின்றன.அவையாவன:

முதலாவது, வாழ்க்கை துன்ப-துயரங்கள் அடங்கியது.

இரண்டாவது, ஆசையே இந்தத் துன்ப துயரங்களுக்கான காரணம்.

மூன்றாவது, ஆசையை ஒழிப்பதன் மூலமே துன்ப,துயரங்களை அகற்ற முடியும்.

நான்காவது, எண்வகை திருச்சபை வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் ஆசையை ஒழிக்க முடியும்.

#### ஆ. உயர்நோக்கு எண்வகை திருச்சபை வழிகள் The Noble Eight Fold Path

1. தூய எண்ணம்
2. தூய சிந்தனை
3. நல்ல பேச்சுக்கள்
4. நற்செயல்கள்
5. ஆகுமான வாழ்வாதாரம்
6. ஆக்கபூர்வமான முயற்சிகள்
7. நேரிய சிந்தனைக் கவனம்
8. அழகிய தியானம்

#### இ. நிர்வாணா

"நிர்வாணா" என்பதன் அகராதிப்பொருள், "மலர்ச்சித் தோற்றம்" என்பதாகும். பௌத்த மதக் கருத்தோட்டத்தின்படி, இதனை அடைவதே வாழ்வின் இறுதி இலட்சியம்! இது பல்வேறு வார்த்தைகளில் வருணிக்கப்படுகின்றது. அனைத்து கவலைகள்,துயரங்களின் ஓய்வுநிலையே அல்லது பரிகாரமே இது. ஆசையை அகற்றக் கூடிய எண்வகை திருச்சபை வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் இதனை அடைய முடியும்.

### 3. சுயக்கட்டுப்பாடு: பௌத்த மத தத்துவம்

ஏற்கனவே கூறியபடி, பௌத்த மதத்தின் முக்கிய அறிவுரைகள் "நான்கு உயர்நோக்கு உண்மைகள்"-ஐ அடிப்படையாகக் கொண்டது.
முதலாவது, வாழ்க்கை துன்ப-துயரங்கள் அடங்கியது.
இரண்டாவது, ஆசையே இந்தத் துன்ப துயரங்களுக்கான காரணம்.
மூன்றாவது, ஆசையை ஒழிப்பதன் மூலமே துன்ப,துயரங்களை அகற்ற முடியும்.
நான்காவது, எண்வகை திருச்சபை வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் ஆசையை ஒழிக்க முடியும்.

மூன்றாவது உண்மையின்படி, ஆசையை ஒழிப்பதன் மூலமே துன்ப,துயரங்களை அகற்ற முடியும். அதேபோல் நான்காவது உண்மையின்படி எண்வகை திருச்சபை வழிகளைப் பின்பற்றுவதன் மூலமே ஆசையை ஒழிக்க முடியும்.இதனடிப்படையில்தான் பௌத்த மத தத்துவமான சுயக்கட்டுப்பாடு அமைந்திருக்கின்றது.

*அடுத்த இதழில் தொடரும்..,*
*இறைநாடினால்..!*

# கவித் தூறல்கள்



எழுத்து
உம்மு அப்துல்லாஹ்

## கல்விச் சிறப்பிதழ்

# முற்றுப்புள்ளி இடஇயலா ஒரு முக்கிய உறவிற்கு..!

கல்லூரிக்காலம் தந்த
கவின்மிகு தோழியே!
உனை சேர்ந்திருக்கும் நாட்களை
இறைவன்
பெருக்கித் தர வேண்டுகின்றேன்!

சிறுபிராயம் முதல்
சிந்தனைகள் எனக்குள்
சிதறப்பட்டு ஒரு
மூலைக்குள் வீசி
முடக்கப்பட்டபோதும், நான்
-விம்மியழவில்லை

நான் வளர்த்த மரத்தில்
நான் கட்டிய கூட்டை – பலர்
கலைத்து..,
என் மனத்தை நாண் கொண்டு
இரணமாக்கியபோதும், நான்
-கலங்கிப்போகவில்லை

பகலுணவோடு பகட்டானவர்களின்
பசப்புவார்த்தைகளையும்
இனிதே பேசி இடித்துரைக்கும்
இரக்கமில்லா ஈனர்களின்
இடிசொற்களையும் கேட்டு, நான்
-ஜீரணிக்காமலிருந்ததில்லை.

வாழ்க்கைத் தடத்தின்
மேடுபள்ளங்கள் வரைந்த கோடுகளில்
வளைய வந்து
விக்கித்து நின்று
விடியலுக்குக் காத்திருந்தபோதும், நான்
-உருகிப்போகவில்லை
இன்று...!

கல்லூரிக் காலங்கள் எனை
இறுகக் கட்டி
இவ்வளவுநாட்களும் உன்னுடன்
வைத்துவிட்டு..
இப்போது கட்டவிழ்க்கும்போது, நான்
-விம்மிய ழுகின்றேனம்மா!

உன் விழிகளால்
நான் பார்த்த காலையும்
மறைகல்வி ஓதும் மாலையும்
தினம் ஐவேளை துதிக்க
தனியாக பாதம் பதித்து செல்வதை நினைத்து
-கலங்குகின்றேனம்மா!

எம் எதிரிகள் எமைப் பார்த்து நகைக்காதிருக்க..
எம் நண்பரிடத்து எமக்கு எந்தத் தீங்கும் ஏற்படாதிருக்க..
எம் மார்க்க உணர்வுகள் பாதிக்கப்படாமலிருக்க..
எம் இருமைவாழ்வில் இறைகண்ணியம் வேண்டி
பிரார்த்தித்து என் மனம்
-உருகுதம்மா!

உனைப் பிரிந்து துவங்கும்
என் புதிய வாழ்வில்கூட என் இதயம்
உனைச் சுமந்த இதயமாகவே
இருக்க, – அதற்கு
இறையருள் என்றும் துணை நிற்கட்டுமம்மா!!



ஃபர்ஸானா ரஃபீக்
ஆசிரியர் குழுமம்

அறிவெனும் ஒளி
அதிகரிக்க அதிகரிக்க,
அறியாமை இருள் அகன்று,
ஒளிச்சாரல்களால் அவன்
உள்ளம் நிரப்பப்படும்.
நேரிய பாதையில் அவன்
பாதங்கள் பயணிக்கும்.
எனவே, மனிதன் தன்னை
நேர்வழிக்கு இட்டுச்
செல்லும் நல்லறிவை
தேடிக் கற்றுக்கொள்ளக்
கடமைப்பட்டவன்.

**வசந்தம்**
ஜூன் 2008, இதழ்
சிறப்புக் கட்டுரையில்..!

## மார்க்கக் கல்லூரி அறிமுகம்

### இலங்கை மண்ணை இலங்கச் செய்யும் ஓர் இனிய கல்லூரி வளாகம்! முஸ்லிம் மகளிர் அரபிக் கல்லூரி!

போர்ச்சூழல்கள் மற்றும் பௌத்தமத பாடசாலைகள் பெருகியுள்ள ஒரு நாட்டில் சிறுபான்மை முஸ்லிம்கள், அமைப்புக்கள் ஏற்படுத்தி தங்கள் மார்க்கக் கல்வியை பயில்வது பாராட்டத்தக்க அம்சம்!

இலங்கை முஸ்லிம்கள் மார்க்கக் பயில ஏதுவாக இஸ்லாமிய மதரஸாக்கள் நாடு முழுவதும் பரவி இருக்கின்றன.

இந்த இதழில், இலங்கையின் முஸ்லிம் பெண்கள் அரபிக் கல்லூரிய அறிமுகம் செய்கின்றோம். இது இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட முஸ்லிம் பெண்களுக்கான முதல் மார்க்கக் கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது.


இலங்கைத் தலைநகர் கொழும்புவையும் - கண்டி நகரையும் இணைக்கும் பிரதான சாலையில் 5 கி.மீ. தொலைவில் கல்-எலியா எனுமிடத்தில் அமைந்த இக்கல்லூரி திரு ர்.ஆ.யு. காதர் அவர்களின் மூளைக்கருவில் பிறந்தது. இதே ஆர்வத்துடன் இருந்த திரு ஆ. அபுல்ஹஸன் அவர்களும் அன்னாருடன் இணைந்துகொள்ள 1958-இல் இக்கல்லூரி நிர்மாணிக்கப்பட்டது.

சேவை மனப்பாங்குடன் நடாத்திச் செல்லப்படும் இக்கல்லூரி தம் மாணக்களை அல்- அய்ன் பல்கலைக்கழகம் -அபுபுதாபி- மற்றும் ரியாத் பல்கலைகழகம் போன்ற வெளிநாட்டு உயர் கல்விக்காகவும் அவர்களை அனுப்பி கல்வியைக் கற்கும் உன்னத வாய்ப்பை வழங்கச் செய்கின்றது. அத்துடன் மார்க்கக் கல்வியை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாது உலகாயுதக் கல்வியை கற்பதற்கும் வசதிகளை கொடுத்து வருகின்றது.

ஒரு மாணவிக்குரிய கல்லூரிக் கட்டணத்தில் அரைப்பபகுதி மட்டுமே அவர்களிடமிருந்து பெற்று சேவை மனப்பான்மையுடன் நடத்தப்படும் இக்கல்லூரி இன்று வரை பல திறமை மிகு மாணாக்கனா உருவாக்கி இருக்கின்றது. உலகின் பல்வேறு நாடுகளிலும், இலங்கையிலும் இக்கல்லூரி மாணவியர் இஸ்லாமிய அழைப்புப்பணியிலும், மார்க்கக் கல்வி போதிக்கும் சேவையிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இக்கல்லூரியின் வளர்ச்சியில் நல்லிதயம் கொண்டோர் பலரினதும் பெரும் அக்கறையும் ஆர்வமும் ஒருசேர உருவாகியதுடன் மற்றும் அவர்களின் உடல்,உள,பொருள் மூலமான கடின உழைப்பேஇன்று இக்கல்லூரி இலங்கையின் பிரபல்ய முஸ்லிம் பெண்கள் கல்லூரியாக பரிணமித்துக் கொண்டிருக்கின்றது எனில் அது மிகையல்ல!(வல்ல இறைவன் அவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக!)

இந்த மாதம் மகளிர் கல்லூரி தன் அரை நூற்றாண்டை பூர்த்தி செய்யுமுகமாக மாபெரும் கண்காட்சியொன்றை ஒழுங்கு செய்து நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அறிவுக் கிரீடம் அணிந்த மாந்தர் அம்மண்ணை மென்மேலும் அலங்கரிக்கட்டும். இறைவன் என்றும் அதற்கு துணை நிற்கட்டும்.கல்லூரியின் இணையதள முகவரி:www.mlackaleliya.org





## ஆளுமை

### மௌலானா அபுல் கலாம் ஆசாத்



சுதந்தர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக விளங்கிய மௌலானா அபுல் கலாம் ஆஸாத் அவர்கள் 1888-இல் மக்கமாநகரத்தில் பிறந்தார்.மார்க்க அறிவு பெற்ற அவருடைய குடும்பப் பின்னணி, அவரை ஒரு சிறந்த மார்க்க மேதையாக உலகுக்கு

அடையாளம் காட்டியது. பெரும்பாலான வளைகுடா நாடுகள்,துருக்கி உள்ளிட்ட இதர நாடுகளுக்கு விஜயம் அவருடைய அறிவை மென்மேலும் வளர்த்தது.

இந்திய சுதந்தரப் போராட்டத்தில் தீவிரத்துடன் ஈடுபட்டு 1912-இல் அல்-ஹிலால் எனும் உர்தூ வாரப் சஞ்சிகையை ஆரம்பித்தார். அவருடைய புரட்சிமிகு கருத்துக்களால் மிரண்ட ஆங்கிலேய அரசாங்கம், அந்தப் பத்திரிகையை தடை செய்தது.1940 முதல் இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு முந்தைய ஓராண்டு வரை இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் தலைவராக திறம்பட செயலாற்றினார். 1947 முதல் 1958 வரை சுதந்திர இந்தியாவின் சீர்மிகு கல்வி மந்திரியாக சிறப்பாகப் பணயாற்றிய மௌலானா அவர்கள் 1958-இல் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு காலமானார்கள்.

## Dr. மரியா நேர்காணல்




*சகோதரி சமீலா யூஸூப் அலீ (ஹயா ரூஹி) அவர்கள் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி பெண்கள் அணியின் ஊடகப்பிரிவுக்காக, மலேஷிய இஸ்லாமியக் கட்சி (PAS) -இன் மேல்மட்ட மத்தியசபை உறுப்பினரும் மலேஷியப் பாராளுமன்ற உறுப்பினருமான னுச. மாரியா மஹ்மூத் அவர்களை நேர் கண்டு பதிவு செய்திருக்கின்றார். அந்த நேர்காணலிலிருந்து...!*

காலம் இறக்கை கட்டிக் கொண்டு பறக்கின்ற ஒரு யுகத்தில் நாம் இருககின்றோம். அதிகமான பெண்கள் மனஅழுத்தம்-stress பற்றி முறையிடுகின்றார்கள். ஓர் அன்பான மனைவியாக,அணைக்கின்ற தாயதக,உடல்நலம் பேணும் மருத்துவராக, பாராளுமன்ற அங்கததவராக நீங்கள் பல பாத்திரங்களை ஏற்றுத் திறம்பட நிர்வகிக்கும் ஒரு பெண்மணி. ஊங்கள் வாழ்க்கையில் மனஅழுத்தத்தை எவ்வாறு சமாளிக்கின்றீர்கள்?

முதலில் உங்கள் மனத்தில் உள்ளதை மற்றவர்களுக்குத் தெரிவிக்கத் தயங்கக்கூடாது. மனத்துக்குள் குமையும் எண்ணங்களை உள்ளுக்குள் அடக்கி வைப்பதால் இரத்த அழுத்தம் எகிறுகின்றது. மனஅழுத்தம் அதிகரிக்கின்றது. மனதுள் நினைப்பதை அப்படியே தெரிவித்துவிடுங்கள். நான் என் வாழ்வில் முதலில் அதைத்தான் செய்கின்றேன். திட்டமிட்டு ஒழுங்குபடுத்தல்,முன்னுரிமைப்படுத்தல் இவை இரண்டின் அடிப்படையிலும் என் பணிகளை மேற்கொள்கின்றேன். புகழனைத்தும் இறைவனுக்கே!

# ஆயிஷா (ரலி) அவர்களது விவாக வாழ்வும் புலம் பெயர்தலும்......



எழுத்து
ஃபர்ஸானா ரஃபீக்

**அண்ணலார் (ஸல்) அவர்களுடனான வழவாக வாழ்வு தொடங்கும் முன்னரே, அன்னை ஆயஜஷா (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்ய வேண்டிய நிலை!**

ஆயிஷா (ரலி) அவர்களது ஹிஜ்ரத்

அண்ணலார் (ஸல்) அவர்களின் அருமைத் துணைவியாக ஆன பின்னர், இஸ்லாமிய வரலாற்றின் குறிப்பிடத்தக்க நிகழ்வான ஹிஜ்ரத்-புலம்பெயர்தல் நிகழ்வு நடைபெற்றது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அன்னை ஆயிஷா (ரலி) அவர்களின் தந்தையும், இஸ்லாத்தை முதன்முதலாக ஏற்றுக்கொண்ட, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் இணைபிரியா உற்ற மகள்களான அன்னை ஆயிஷா (ரலி), அஸ்மா (ரலி) ஆகியோரையும் அழைத்துக்கொண்டு மதீனா வருமாறு பணித்திருந்தார்கள். இவ்வாறே அன்னை ஆயிஷா (ரலி) அவர்களது ஹிஜ்ரத் பயணம் அமைந்தது. மதீனா நகரை வந்தடைந்த ஆயிஷா (ரலி) அவர்கள் சிறிது நோய்வாய்ப்பட்டு இளைத்துப் போனார்கள். நாட்செல்லச் செல்ல அன்னையின் உடல்நிலை மதீனாவின் காலநிலைக்கு ஏற்றதாக மாறியது.



தோழரும், தற்போது மாமனாராகவும் ஆகிவிட்ட அபூபக்கர் (ரலி) அவர்களுடன் மதீனாவுக்கு ஹிஜ்ரத சென்றார்கள். இவர்களது குடும்பத்தினரோ மக்காவிலேயே இருந்தனர். மதீனாவில் தனது நிலைகளை உறுதிப்படுத்திய இறைத்தூதரவர்கள் மனைவியையும் மக்களையும் மதீனாவுக்கு அழைத்துவர ஸைத் இப்னு ஹாரிஸா (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். அபூபக்கர் (ரலி) அவர்களும், அன்னாரிடம் தனது மகன் அப்துல்லாவுக்கும் ஒரு மடலை அனுப்பி அதில், தனது மனைவி உம்மு ருமானையும்

இறைநம்பிக்கையாளர்களின் அன்னை எனும் உயர்மதிப்பு

மதீனா மாநகரம் வந்தடைந்த பிறகு, அன்னை ஸவ்தா (ரலி) அவர்களின் இல்லத்துக்கு அருகிலேயே, அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுக்கான இல்லமும் நிர்மாணிக்கப்பட்டது. பின்னர் இறைத்தூதரவர்கள் அபூபக்கர் (ரலி) அவர்களது வீட்டுக்குச் சென்று ஆயிஷா(ரலி) அவர்களது கரம் பற்றினார்கள்.

இதைப்பற்றி அன்னையவர்கள் கூறுகின்றார்கள்: “இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எமது வீட்டுக்கு வந்தார்கள். அவர்களுடன் மதீனமாநகரைச் சேர்ந்த சில ஆண்களும் பெண்களும் வந்திருந்தனர். அவ்வேளை ஊஞ்சலாடிக்கொண்டிருந்த என்னை எனது தாய் அழைத்து, தலை சிவி விட்டு, புத்தாடை அணிவித்து அலங்கரித்தார்கள். பின்னர், இறைத்தூதரவர்களுக்கருகில் அமர்த்தி, “அல்லாஹ்வின் தூதரே! இதோ உங்கள் மனைவி. அல்லாஹ் உங்களுக்கு அவர்கள் மூலம் விருத்தியையும், அவர்களுக்கு உங்கள் மூலம் விருத்தியையும் ஏற்படுத்துவானாக!” என்று எங்கள் இருவரையும் வாழ்த்தினார்கள். அத்துடன் அங்கிருந்த மக்கள் வெளியேறினர். பின்னர் இறைத்தூதரவர்கள் என்னை எனக்காக நிர்மாணிக்கப்பட்ட இல்லம் அழைத்துச் சென்றார்கள். அது இறைஇல்லத்தோடு இணைத்துக்கட்டப்பட்ட சில அத்தியாவசிய தேவைகளை மட்டுமே கொண்ட ஒரு சாதாரண வீடாக இருந்தது.

*ஆயிஷா (ரலி) உடனான முஹம்மத் (ஸல்) அவர்களின் இல்லற வாழ்வு எப்படி? அடுத்த இதழில்.. இறை நாடினால்..!*

**முஹம்மத் ஜாபிர்**
ஆசிரியர் குழுமம்

*இல்லற வாழ்வில் இருந்துகொண்டே பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பதை இஸ்லாம் நிரூபிக்கின்றது, அது பொருளாதாரப் பிரச்னைகளாக இருப்பினும் சரியே!*

**வசந்தம்**
பிப்ரவரி 2009, இதழ்
பொருளாதாரம் பகுதியில்..!

# மழலையர் சோலை

எழுத்து
சௌந்தர்யம்




## வண்ணம் தீட்டுங்கள் !

## தமிழ் கற்போம் வாருங்கள்!


# ஊ

பிள்ளைகளே!
இந்த மாதம் 'ஊ' எனும் தமிழ் எழுத்தைக் காண்போம்.
'ஊ'-யை உச்சரிப்பது எப்படி?
கண்ணாடி முன் நின்று இரு உதடுகளையும் குவித்து நன்கு இழுத்து ஒலியை எழுப்புங்கள்!
அதாவது, ஆங்கலத்தில் O.. O.. O..
கடந்த இதழில், உயிரெழுத்து 'உ'-வைக் கொண்டு உதாரணங்களைக் கண்டோம். இப்போது 'ஊ'வைக் கொண்டு உதாரணங்களைக் காண்போமா..?

ஊசி
OOSI

Needle

ஊதல்
OODAL

Whistle

ஊஞ்சல்
OONJAL

Swing


முஹம்மத் உவைஸ் (9)
முஹம்மத் இப்ராஹீம் (10)
முஹம்மத் முபாரக் (7)

## இதோ, உங்கள் பிள்ளைச் செல்வங்கள்!

பெற்றோர்

திரு & திருமதி
அப்துல்லாஹ் ஹாஹிப்
அப்துல் காதர்
தமிழகம், இந்தியா
சால்மியா, குவைத்

எழுத்து
பேப்பர் பையன்

சுற்றத்து செய்திகள்

# சூடு பிடிக்கும் இந்தியக் கல்விச் சந்தை!



உலகின் மாபெரும் ஒரு ஜனநாயக நாடு, அதுவும் பல்இன,மத,சாதி,மொழி கொண்ட ஒரு நாட்டில் முழுமையான கல்வியறிவு வீதத்தை எதிர்பார்ப்பது இயலாது. எனினும், இந்தியக் கல்வித்துறை தற்காலங்களில் செம்மைப்படுத்தப்பட்டு உலகில் தரமான கல்வியளிக்கும் நாடுகளில் ஒன்றாக வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

உயர்கல்வி வசதி மேம்பாடு மற்றும் பெருக்கத்திற்காக இந்திய நடுவண் அரசு 11-ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் 85 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. இதனால், கல்வி பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பரோதடு தரமும் மேம்படும் என மத்திய அரசு நம்புகின்றது. அனால், இதனை அடைய உலகமயமாக்கலின் அடுத்த பரிணாமமாக மத்திய அரசு கல்வித்துறையை திறந்துவிட வேண்டும் என பன்னாட்டு வாணிப அமைப்புக்கள் கூறியுள்ளன.

எனவே, உலக அளவிலான கல்வி நிறவனங்கள் விரைவில் நமது இந்தியாவிற்குள் எளிதாகக் கடை விரிக்க ஏதுவான நடைமுறைகள் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. ஆனால், 106 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவிலோ வெறும் 370 பல்கலைக்கழகங்களே உள்ளன. இந்திய மக்கள் தொகையில் இன்னமும்கூட 35 சதவீதம் பேர் படிப்பறிவு இல்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதை சரி செய்ய அரசு மட்டுமே முயற்சி எடுத்தால் போதாது.அதன் நிதியும் போதாது. இந்தியாவில் தனியார் பள்ளிகளில் பயிலுவோர் மட்டுமே 9 கோடி என்பது மற்றொரு முக்கியமான தகவலாகும். தற்போது இந்திய கல்வித்துறையில் புரளும் பணத்தின் மதிப்பு 16 ஆயிரம் கோடியாகும். இது 2012-க்குள் 70 ஆயிரம் கோடியாக அதிகரிக்கும். அடுத்த 4 ஆண்டுகளில் புதிதாக 800 பொறியியல் கல்லூரிகளும் 300 புதிய எம்.பி.ஏ. நிறுவனங்களும், 60 புதிய மருத்துவக் கல்லூரிகளும் துவங்கப்படும். இதனால் கல்வித்துறையும் கல்வி சார்ந்த பிற துறைகளும் பெரிய வளர்ச்சியை எட்டும் என மதிப்பிடப்படுகின்றது.

மக்கள் தொகையைப் பொறுத்துகுறைவானதே என்றாலும், 65% கல்வியறிவுபெற்றுள்ள பாரதம், பொறியியல்,மருத்துவம்,அறிவியல் உள்ளிட்ட துறைகளில் உலகிலேயே சிறந்த மாணாக்கர்களையும்,அறிவுஜீவிகளையும் வழங்கி வருவது குறிப்படத்தக்கது.100% கல்வியறிவு பெற்ற கேரளம் உலகிலேயே முழு எழுத்தறிவு பெற்ற மாநிலங்களில் ஒன்றாகும்.அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கணிணித்துறை இந்திய மூளைகளால் இயங்குவது இதற்கு சான்று!மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் இந்தியக் கல்வித்துறை, மிக அதிக அளவு மான்ய நிதிஒதுக்கீடு பெறும் துறையாகும்

தற்போது 15-ஆவது மக்களவைத் தேர்தலை சந்திக்க இருக்கும் பாரதத்தின் தற்போதைய கல்வி அமைச்சகக் குழுமம்:

கேபினட் மந்திரி - திரு.ஷக்தி பாண்டே

இராஜாங்க மந்திரிகள்:

அ. திரு. அலீ அஷ்ரப் .பாத்மீ (எழுத்தறிவு மற்றும் ஆரம்பக் கல்வித் துறை)

ஆ. திருமதி. தக்குபதி புரந்தேஸ்வரி (உயர்நிலைக் கல்வித் துறை)

## முன்னணியில் இலங்கை கல்வி

போர்ச்சூழல்கள் அன்றாட வாழ்க்கையாகிப் போன ஒரு நாடு மூன்றாம் உலக நாடுகளில் இருக்க வேண்டிய சராசரி கல்வியறிவு சதவீதத்துக்கும் மேலே அதிகபட்ச கல்வியறிவு வீதத்தைப் பெற்றுள்ளது. அதுமட்டுமல்ல, மூன்றாம் உலக நாடுகளிலேயே முதன்மை இடத்தையும், தெற்காசியாவிலேயே முதல் இடத்தையும், ஆசியாவிலேயே முதல் இடம் பெற்றுள்ள நாடுகளில் ஒன்றாகவும் திகழும் அந்நாடு இலங்கை!

இங்கு மொத்த கல்வியறிவு 97%ஆண்கள் கல்வியறிவு வீதம் 95.8% பெண்கள் கல்வியறிவு 93%. 2007-க்கான தெசிய கல்வி நிதி ஒதுக்கீடு மொத்த உள்நாட்டு (GDP) உற்பத்தியில் 5.4ழ என்பது குறிப்பிடத்தக்கது.



இலங்கையின் கல்வி அமைப்பு, ஆரம்ப நிலை. மேன்நிலை மற்றும் பட்டவகுப்பு கொண்டது. அமைச்சகம் கல்வி மற்றும் உயர் நிலைக் கல்வி என இரு பிரிவுகளாக இயங்குகின்றது. அனைத்துத் துறைகளுக்கான சேர்க்கைகளிலும் குறைந்தபட்ச கல்வி அத்தியாவசியமாகக் கொண்டிருப்பது கல்வியின் அவசியத்தை இந்நாடு உணர்ந்திருப்பதற்கு உன்னத சான்று.

இலங்கை கல்வி மந்திரி - திரு. சுசில் பிரேமஜெயந்தா

கல்விச்சேவைக்கான அமைச்சரவை சாரா மந்திரி - திருமதி.நிர்மலா கொதகவாலா

துணை மந்திரி - திரு எம். சச்சிதாநாதன்

நிரந்தரச் செயலர் - எம.எம.என்.டி. பண்டாரா

**முஹம்மத் ஃபைஸல்**
ஆசிரியர்குழுமம்

உண்மையில் அண்ணலார் (ஸல்) அவர்களின் வாழ்வு சுகபோகங்களையும் ஆடம்பரத்தையும் கொண்டதல்ல! மாறாக, தான் அறிவுறுத்தி வருகின்ற கொள்கை மானுடர் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே இருந்நதது.

வசந்தம்
பிப்ரவரி 2008, இதழ்
ஆளுமை பகுதியில்..!

## ஏ.எம்.யூ-அமெரிக்க கூட்டுறவு



ஏ.எம்.யூ. என்று சுருக்கமாக அழைக்கப்படும் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம், அமெரிக்காவிலுள்ள வாஷங்டன் சட்டப்பல்கலைக்கழகத்துடனும், ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்துடனும் இணைந்து புதிய படிப்புக்களை தமது மாணவர்களுக்குத் தர இருக்கின்றது. இதனால், ஏ.எம்.யூ. மாணவர்களுக்கு சிறப்பான பணிவாய்ப்புக்கள் கிடைக்கும் என நம்பப்படுகின்றது.மாணவர்கள், ஆசிரியர்கள் பரிமாற்ற ஒபபந்தமும் செய்தகொள்ளப்பட்டுள்ளது. வரும் கல்வியாண்டு முதல் அமலுக்கு வரும் இது தொடர்பான ஒப்பந்தத்தில் அமெரிக்க சென்ற இந்த பல்கலைக்கழக துணைவெந்தர் பி.கே. அப்துல் அஜீஸ் கையெழுத்திட்டள்ளார். சமீப காலமாக, இந்த பல்கலைக்கழகத்தின் கல்வித் தரமானது தொடர்ந்து முன்னேறி வருவதுடன் ஆய்வு,நூலக வசதி,உள்கட்டமைப்பு வசதிகளிலும் சிறப்பான மேம்பாட்டைஏ.எம்.யூ. பெற்று வருகிறது.

# 3-ஆம் ஆண்டு சிறப்பு அறிவுப்போட்டி



■ பின்த் அன்ஸார்



## சரியான விடையை ✓ செய்க!

### வசந்தம் தமிழ் மாதாந்தரி, இன்றை வரை பிரசவித்த இதழ்கள் எத்தனை?

1. 29 ○

2. 20 ○

3. 25 ○

பெயர்:
குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்
Civil ID OR Passport No:
☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

தொலைபேசி:
குவைத்தில் வசிக்கும் இடம்:

## விதிமுறைகள்

1. இந்த சிறப்பு அறிவுப்போட்டி இந்த இதழுக்கு மட்டுமே!
2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்!
3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை!
4. பெயர், தொலைபேசி,எண்,குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.
5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
6. வெற்றியாளர் ஒரே ஒருவருக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும்.
7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது
8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது musawir@alnajat.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம்.- DANA Textiles - மினா பஜார்,மிர்காப் -SEEMATY, மிர்காப் - Peoples Restaurant,மிர்காப்-- Careem Lanka,மிர்காப் -Abraar-al-Deerah,Studio SriLanka,மிர்காப் - IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம்.
9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 31.05.2009
10. விடைகள், மற்றும் வெற்றி பெற்றோர் விவரங்கள் ஆகஸ்ட் 2009 இதழில் வெளியாகும். இறைவன் நாடினால்..!


CAMS CENTRE FOR COMPUTER & MANAGEMENT STUDIES
معهد كامز للتدريب الأهلي
الأمانة العامة للأوقاف
Under the Kind Patronage of
Kuwait Awqaf Public Foundation
Islam Presentation Committee Conducts
ARABIC COURSE FOR NON-ARABS
LEARN ARABIC
أ ب ت ج ح
Registration From 22\03\2009
FREE
Authorized Certificate From CAMS
Hot Line: 94066743
www.ipc-kw.com
...رحمة للعالمين
KPCC 24712574 94064491
Almwla saleh 22444117
Salwa 25637900
Sharq 22418934 22418917
Aware Center 25335260 25335280
Rawda 22511301 66944422
Salimiyah 25733263 66944422
Farwaniyah 99285459 24735626
Almangaf 99256165 23723002
Al-Jahra 24558830 97509063
IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

# உழைப்பாளியே உண்மை முதலாளி!

வண்ணம் தீட்டி எம் இல்லத்தை செல்வப்படுத்தும்
இவன் வாழ்வோ..
வசந்தங்களின்றிய ஏழ்மை நிலையில்..!

கழனியில் இறங்கி, களைபிடுங்கி..,
சுட்டெரிக்கும் சுடுமணலில்
நெல் விதைத்தான் அவன் பசி தாங்கி.!

வீதியை அவன் வீடாக்கி
எம் இல்லத்தைக் கட்டி முடித்தான்..,
காயங்களுடனும் களைப்புகளுடனும்..!

ஆதலின்.., மானுடரே..!
'உழைப்பாளியின் வியர்வை உலரும் முன்னர்
அவன் கூலியை தந்துவிடுங்கள்' எனும் நபிகளாரின்
நன்மொழியைப் பின்பற்றுவீர்..!- அதனை
நானிலமெங்கும் பரப்புவீர்..!!

யாவரும் உயிர் சுமந்த ஜீவன்களே..!
பணப்பசுமையும் கணப்பெருமையும் எமை கூறிட வேண்டாம்!!

